MC.No.9/2022

DATED:- 03.01.2025

PW1 :- மெஹர் உன் நிஷா, க/பெ. யாசர் அராபத்,38

(Solemnly affirmed before this court under act X of 1969)

எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர்.

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-

8. திருமணத்திற்கு முன் என்னுடைய தந்தையின் வீட்டில் இருந்தேன் என்றும் திருமணத்திற்கு பிறகு, என் தந்தைக்கு சொந்தமான மற்றொரு வீட்டில் கணவருடன் நான் வாழ்ந்து வந்தேன் என்றால் சரியல்ல. நாங்கள் அனைவரும் ஒரே வீட்டில் தான் வாழ்ந்து வந்தோம். திருமணத்திற்கு பிறகு, என்னுடைய கணவரின் வீட்டில் எத்தனை மாதங்கள் வாழ்ந்து வந்தேன் என்றால், என்னுடைய கணவரின் வீட்டில் நானும் என் கணவரும் சுமார் 5 மாதங்கள் அங்கு வாழ்ந்தோம். அதன் பிறகு என்னுடைய தந்தையின் வீட்டிற்கு வந்து விட்டோம். நானும் என்னுடைய கணவரும் ஒன்றாக எந்த வருடம் வரை வாழ்ந்து வந்தோம் என்றால் 2012 ஆம் வருடம் வரை இருவரும் ஒன்றாக வாழ்ந்து வந்தோம்.

9. 2012 ஆம் வருடத்திற்கு பிறகு, நான் எந்த வீட்டில் வசித்து வந்தேன் என்றால் என்னுடைய அப்பா வீட்டில் தான் நான் வசித்து வந்தேன். 2012 ஆம் வருடத்திற்கு பிறகு என்னுடைய கணவரான எதிர்மனுதாரர் என்னுடன் வசிக்கவில்லை என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 2013ஆம் ஆண்டிற்கு பிறகு தான் எதிர்மனுதாரரை பிரிந்து என் மகளுடன் என் தந்தை வீட்டிற்கு நான் வந்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் அது சரியல்ல.

10. நான் எதிர்மனுதாரருடன் சிறு விஷயங்களுக்கு கூட சண்டையிடுவேன் என்றும் அவர் அதைப் பற்றி கேட்டால் மற்றொரு பெண்ணுடன் அவருக்கு தொடர்பு உள்ளது என்று சந்தேகப்பட்டேன் என்றால் சரியல்ல. எங்கள் மதப்படி, எதிர்மனுதாரர் எனக்கு தலாக் கூறிவிட்டார் என்றால் அது தவறு. என்னுடைய தந்தை திருவொற்றியூர் ஜமாத் தலைவர் ஆக உள்ளார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் தலாக் கூறியதை ஜமாத்திற்கு சென்று பதிவு செய்ய முற்பட்ட பொழுது, என்னுடைய தந்தை எதிர் மனுதாரர் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார், அவர் கூறுவதை ஏற்றுக்கொள்ளாதீர்கள் என்று தடுத்தார் என்றால் சரியல்ல.

11. 2009 ஆம் வருடம், எதிர்மனுதாரர் நடத்தி வந்த ஸ்கிராப் தொழிலை, தொழில் முன்விரதம் காரணமாக என்னுடைய தந்தை அடியாட்களை வைத்து அடித்து உடைத்தார் என்றும் அதைப் பற்றி அவரிடம் நான் தந்தையிடம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. எதிர் மனுதாரர், சென்னை மவுண்ட் ரோடில் உள்ள ஜமாத்திற்கு சென்று, தலாக் பதிவு செய்ய முற்பட்டார் என்றும் அப்பொழுதும் என்னுடைய தந்தை அதனை தடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. தற்போது என்னுடைய தந்தை என்ன வேலை பார்த்து வருகிறார் என்றால், ஸ்கிராப் பிசினஸ் தொழில் தான் செய்து வருகிறார்.

12. தற்போது என்னுடைய தந்தை ஆட்டோ ஓட்டும் தொழிலும் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 8ல், என் தந்தை ஆட்டோ ஓட்டி குடும்ப செலவிற்கு வருமானம் ஈட்டி வருகிறார் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அது தவறு. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்த மனு மற்றும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய கணவர் ஸ்கிராப் தொழில் செய்து மாதம் ரூபாய் ஒரு லட்சம் சம்பாதித்து

வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளேன். அதற்கு ஆதாரமாக ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

13. எதிர் மனுதாரரர் நடத்தி வந்த ஸ்கிராப் தொழிலின் கடையை, கடற்கரை அருகாமையில் உள்ளது என்பதால், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவு பேரில், அகற்றப்பட்டது என்பது எனக்கு தெரியாது. கடந்த 8.4.2022, அன்று நீதிமன்றத்தில் இந்த மனு விசாரணையை நானும் எதிர் மனுதாரரர் ஆஜராகி வெளியே சென்றவுடன் என்ன நடந்தது என்பது நினைவில் உள்ளதா என்றால் எனக்கு நினைவில் இல்லை. அன்று மாலை, என்னுடைய தூண்டுதலின் பெயரில், என்னுடைய சகோதரர் மற்றும் எதிர் மனுதாரரின் சகோதரர் இருவரும் எதிர்மனுதாரரை சரமாரியாக தாக்கி அதன் விளைவாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் சரியல்ல. பிரச்சனை எதற்காக ஏற்பட்டது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

14. (எதிர்மனுதாரரர் வழக்கறிஞர் சாட்சியிடம் தனிப்பட்ட முறையில் அவர்களுடைய அந்தரங்க கேள்விகள் கேட்கப்பட வேண்டும் என்று கூறினார். மேற்படி சங்கதிகள் இந்த மனுவிற்கு சம்பந்தப்பட்டவை என்று கூறினார். அதனால் IN CAMERA அடிப்படையில், நீதிமன்றத்தில் இருந்த அனைவரையும் வெளியே இருக்குமாறு உத்தரவிடப்பட்டது. குறுக்கு விசாரணை தொடரப்பட்டது). எனக்கும் எதிர்கொண்டுதாரரர் அவருடைய சகோதரரான முகமது ஆரிப் என்பவருக்கும் தவறான உறவு உள்ளது என்றும் தொடக்க காலத்தில் இருந்து அது உள்ளது என்றும் அதனால் தான் அன்றைய தினமும் எங்களுக்குள் சண்டை ஏற்பட்டு அவர்கள் எதிர்மனுதாரரை அடித்தார்கள் என்றால் சரியல்ல. அது தவறு. அந்த பிரச்சனை

சம்பந்தமாக, என் சகோதரரும், எதிர்மனுதாரரின் சகோதரரும், சென்னை மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் முன்ஜாமின் பெற்றார்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

15. எதிர் மனுதாரர் என்னுடைய பெயரில் மாதவரத்தில் ஒரு இடம் வாங்கி உள்ளார் என்றும் அதனை ஜீவனாம்சமாக என்னிடமே கொடுத்துவிட்டார் என்றும் அதனால் அவர் எனக்கு ஜீவனாம்சம் மாதம் தோறும் கொடுப்பதற்கு கடமை பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எதிர் மனுதாரர், என் பெயரில் ஒரு சொத்து மட்டுமே வாங்கினார். அது திருவொற்றியூர் பகுதியில் உள்ள சொத்து ஆகும். என்னுடைய நகைகளை அடமானம் வைத்து அது வாங்கப்பட்டது. மாதவரத்தில், அவர் எந்த சொத்தும் வாங்கவில்லை.

16. தற்போது எதிர்மனுதாரர் கூலி வேலை தான் பார்த்து வருகிறார் என்றும் அவருக்கு போதிய வருமானம் இல்லை என்பது எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. அவர் சுயமாக தொழில் செய்து வருகிறார். எதிர்மனுதாரர் தன் குழந்தைகளின் படிப்பு செலவிற்காகவும் மருத்துவ செலவிற்காகவும் பணம் கொடுத்து உதவி வருகிறார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் பெயரில் எந்த சொத்துக்களும் இல்லை என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. முழு ஜீவனாம்சமாக எனக்கு ஒரு சொத்தை எதிர்மனுதாரர் கொடுத்து விட்டார் என்றும் மாதா மாதம் ஜீவனாம்சம் கொடுப்பதற்கு அவருக்கு போதிய வசதி இல்லை என்றும் அவர் கொடுப்பதற்கு கடமை பட்டவர் அல்ல என்றும் சொன்னாள் சரியல்ல.

17. எதிர்மனுதாரரை பிரிந்து 10 ஆண்டுகள் ஆகிவிட்டது என்றும், என் அப்பாவின் தூண்டுதலில், எதிர்மனுதாரர் மீது வேண்டுமென்றே

ஜீவனாம்சம் கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் சகோதரர் மற்றும் எதிர் மனுதாரரின் சகோதரரின் தூண்டுதலின் அடிப்படையில் தான் இந்த மனுவை எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றும் ஜீவனாம்சம் பெறுவதற்கு நான் தகுதியுடைய நபர் அல்ல என்றால் சரியல்ல. நான் வசதியாக உள்ளேன் என்ற காரணத்திற்காகவும், எதிர்மனுதாரரை பழிவாங்க வேண்டும் என்ற காரணத்திற்காகவும் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அதனால் இந்த மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.